SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

## ஜனவரி 2016 பரீட்சை

**(January 2016 Examination)**

வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்

**(SS2)**

# தகவல் தொழில்நுட்ப திறன்கள்

# (ITS)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

ஜனவரி **2016** பரீட்சை

## (SS2) தகவல் தொழில்நுட்ப திறன்கள்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறு நோக்கு வினாக்கான விடைகள்(முவுஞள)**

**இப்பகுதியில் உள்ள 20 வினாக்களுக்கும் விடையளிக்க.**

**(40 புள்ளிகள்)**

**வினா 01 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள**

| கேள்வி எண் | பதில் |
|---|---|
| 1.1 | 3 |
| 1.2 | 1 |
| 1.3 | 3 |
| 1.4 | 4 |
| 1.5 | 2 |
| 1.6 | 4 |
| 1.7 | 3 |
| 1.8 | 1 |
| 1.9 | 2 |
| 1.10 | 3 |
| 1.11 | பிரதான புலம் (Key Filed) |
| 1.12 | பணிக்கூறு (Function) |
| 1.13 | பதிவு நீக்குதல (Unsubscribe) |
| 1.14 | குறியீடு (Symbol) |
| 1.15 | எழுத்து B |
| 1.16 | (பிழை) |
| 1.17 | (சரி) |
| 1.18 | (பிழை) |
| 1.19 | (பிழை) |
| 1.20 | (சரி) |

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி –B**

**ஆறு வினாக்களில் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**
**(60 புள்ளிகள்)**

## வினா 02 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

a) Add-ins ஆனது மைக்ரோசொப்ட் பவர்பொயின்ட்டிற்கான தனிப்பயன் கட்டளைகள் (Custom commands) அல்லது தனிப்பயன் அம்சங்களை (Custom features) இணைக்கும் மேலதிக நிரல்களாகும். இதனை Office தொடரறாநிலையில் (online) தரவிறக்கம் செய்யலாம், மூன்றாம் தர விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் அல்லது சுயமாக உருவாக்கிக் கொள்ளலாம்.

b) ஒத்திகைக் காலத்திட்ட அமைப்பு (Rehearse timings option) தெரிவினால் ஆற்றப்படும் செயற்பாடுகள்.
முன்வைப்பொன்றைச் (Presentation) தொடர்படவில்லைக் காட்சியில் (Slide show view) இயங்கச் செய்து, ஒவ்வொரு படவில்லையும் இயங்குவதற்குத் தேவையான நேரத்தையும் பதிவு செய்ய பயன்படுகிறது. இவ் ஒத்திகைக் காலத்திட்ட அமைப்பைப் (Rehearse timings option) பயன்படுத்தி முன்வைப்பை (Presentation) தானாக (Automatic) இயங்கச் செய்யலாம்.
ஏன் இது அனுகூலமானது:
குறித்த கால எல்லைக்குள் இயங்கக் கூடிய வகையில் முன்வைப்பினைப் பொருந்தச் செய்யலாம்.

c) **இயல்பான தோற்றம் (Normal view):** முன்வைப்பில் பிரதான சீரமைத்தல் (editing) காட்சி இதுவாகும். இந்த இயல்பான தோற்றக் காட்சியில் எழுதுதல், வடிவமைத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்யமுடியும். இதில் நான்கு தொழிற்பாட்டுப் பகுதிகள் உள்ளது. அவையாவன, வரிப்பட படலம் (Outline tab), படவில்லைத் படலம் (Slide tab), படவில்லைப் படலம் (Slide pane) மற்றும் குறிப்புப் படலம் (Notes Pane).

**படவில்லைக் காட்சித் தோற்றம் (Slide show view):** இக்காட்சி தோற்றம் மூலம் முன்வைப்பை பார்வையாளருக்கு காட்சிப்படுத்தலாம். இக்காட்சி முழுத்திரையையும் ஆக்கிரமித்து காட்சிப்படுத்தக் கூடியது. பார்வையாளர் பார்ப்பதற்கு பெரிய திரையில் விழுத்தி காட்சிப்படுத்த இக்காட்சி தோற்ற முறையே மிகச் சரியானதாகும். உண்மையான முன்வைப்பின் போது அமையும் வரைகலை (Graphic), நேரம், ஒளிப்படங்கள் (Movies), அசைவுருத் தோற்றம் (Animated Effects) மற்றும் தோற்ற நிலைமாற்றம் (Transition Effect) என்பவற்றை இக்காட்சியில் பார்க்கலாம்.

**வரிசைப்படுத்தப்பட்ட படவில்லை காட்சி (Slide sorter view):** படவில்லையை சிற்றுரு (Thumbnail) வடிவில் காண்பிக்கும் காட்சி இதுவாகும். இக்காட்சி முறையில் படவில்லையை வரிசைப்படுத்தல், ஒழுங்கு படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு உதவுவதுடன் அச்சு (Print) செய்ய ஆயத்தப்படுத்துவதற்கும் இக்காட்சி முறை பயன்படுகிறது.

d) தெரிவு 01 : முன்வைப்பை "Package for CD" எனும் வெளியீட்டு (Publishing) முறையில் குறுந்தட்டில் (CD) பதிந்து குழும அறைக்கு (Board room) எடுத்துச் செல்லலாம்.

தெரிவு 02 : முன்வைப்பை PDF எனும் கோப்பு வடிவில் வெளியீட்டு, அக்கோப்பினை குழும அறைக்கு (Board room) எடுத்துச் செல்லலாம். (குழும அறையில் உள்ள கணினியில் PDF ஐ காட்சிப்படுத்துவதற்கான Adobe Acrobat Reader போன்ற ஏதேனும் மென்பொருள் உள்ளது என எடுகோள் கொள்க)

தெரிவு 03 : முன்வைப்பினை படிம (images) வடிவில் சேமித்து, அதனை USB தகவல் சேகரிப்பானில் எடுத்துச்சென்று குழும அறையில் உள்ள கணினியில் திறந்து பயன்படுத்தலாம்.

தெரிவு 04 : மைக்ரோசொப்ட் பவபொயின்ட்டிலுள்ள "Create a Video" எனும் தெரிவினைப் பயன்படுத்தலாம்.

தெரிவு 05 : முன்வைப்பினை இயக்கவல்ல மூன்றாம் தரப்பு மென்பொருள் ஒன்றை இணையத்தில் இருந்து தரவிறக்கம் (Download) செய்து பயன்படுத்தலாம்.

## வினா 03 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

A.

a) நெடுவரிசை விளக்கப்படம் (Column Chart) / துண்டு நிரல் விளக்கப்படம் (Clustered Column Chart)
b) இரு பரிமான வரி விளக்கப்படம் (2D Line Chart)
c) துண்ட விளக்கப்படம் (Pie Chart)
d) சிதறல் வரைபடம் (Scatter Diagram)
e) இரு பரிமான பகுதி விளக்கப்படம் (2DArea Chart)

B.

| நுண்ணறை | சூத்திரங்கள் / பணிக்கூறுகள் |
|---|---|
| F5 | =IF(B5>1600,20000,0) |
| G5 | =(14-C5)*1500 or IF(C5>14,0,(14-C5)*1500) |
| H5 | =F5+G5 |
| I5 | =IF(E5>3,(E5-3)*0.1,0) |
| J5 | =IF(H5*(1+I5)>45000,45000,H5*(1+I5)) |

## வினா 04 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

a) இணையவழி புத்தகக்கடையின் அனுகூலங்கள் ( பாரம்பரிய புத்தகக்கடையுடன் ஒப்பிடும் போது இணையவழி புத்தகக்கடை முறையில் ஏற்படும் அனுகூலங்கள்)

1. மரபு ரீதியான புத்தகக்கடைகளில் ஏற்படும் இடப் பற்றாக்குறை மற்றும் மூதலீடு ஆகிய தடைநிலைகள் இணையவழிப் புத்தகக்கடையினை உருவாக்கும் போது ஏற்படாது.

இணையவழிப் புத்தகக்கடையின் மூலம் பெரிய வகையான, பெரிய எண்ணிக்கையான புத்தகங்களை வழங்க முடியும்.

2. மரபு ரீதியான புத்தகக்கடைகளினால் ஒரு குறிப்பிட்ட அளவு பிரதேசத்தையே சார்ந்து விற்பனை செய்ய முடியும் ஆனால் இணையவழிப் புத்தகக்கடை ஒன்றை அமைப்பதனால், எமது சேமிப்பகத்தை (Store) முழு உலக மக்களாலும் அணுக முடியும். இங்கு விற்பனைச் சந்தையானது விரிவடைந்து காணப்படுகிறது.
3. செயற்படுத்தல் மற்றும் கொண்டு நடத்துவதற்கான செலவு மரபு ரீதியுடன் ஒப்பிடும் போது குறைவானது.
4. இணையவழி மூலம் மேற்கொள்ளும் போது வாடிக்கையாளர்களால் பல தகவல்களை வழங்க முடியும். வாடிக்கையாளர் கருத்துக்கள் (Comments), மீளாய்வு (Review) மற்றும் விமர்சனங்களை (feedback) வழங்கக்கூடியதாக உள்ளது. இவ்வாறான விடயங்களை மரபு ரீதியில் செய்யமுடியாது.
5. இணையவழி மூலம் மேற்கொள்ளும் போது அதிகளவிலான புத்தகங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கத் தேவையில்லை.

b) இணையவழி புத்தகக்கடையின் பிரதிகூலங்கள் (பாரம்பரிய புத்தகக்கடையுடன் ஒப்பிடும் போது இணையவழியில் புத்தகக்கடை முறையில் ஏற்படும் பிரதிகூலங்கள்)

1. இணையவழி புத்தகக்கடை முறைமையில், இணைய வசதி உள்ளவர்கள் மட்டும் அணுகமுடியும். கொடுப்பனவுகளின் போது இங்கே மின்னியல் கொடுப்பனவு (electronic payment method) முறையே ஏற்றுக்கொள்ளப்படுகிறது (கடனட்டை). இவ்வாறான காரணங்கள் இணையவழி புத்தகக்கடை சந்தையில் தடைநிலைகளாக உள்ளது.
2. இணையவழி புத்தகக்கடை முறையில் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் வரிசம்பந்தமான விடயங்கள் போன்ற கொள்பணிகள் மேலதிகமாக உள்ளது.
3. குறும்பர் (Hackers), நச்சுநிரல் (Virus), DOS தாக்குதல் போன்றவற்றில் இருந்து இணைய மூலங்களைப் பாதுகாக்க வேண்டும். முகாமைச் செயற்பாட்டில் இது ஒரு மேலதிக பணியாகக் காணப்படுகிறது.
4. இணையத்தளங்களில் (Websites) ஏற்படும் இடையூறு / தகவல் முறைமையில் (Information system) இடைநிறுத்தங்கள் ஏற்படலாம்.
5. புத்தகங்களைத் திருப்புதல் (Returning) என்பது வாடிக்கையாளருக்கும், புத்தக நிலையத்திற்கும் சிக்கலான விடயமாகும்.

C) 1. www.amazon.com
2. www.barnesandnoble.com

d) பல வழிகளில் கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்ள முடியும்.

a. கடனட்டை (Credit Cards)
b. பற்று அட்டை (Debit Cards)
c. இலத்திரனியல் பணம் மூலம் (உதாரணம் Ez Cash மற்றும் M cash)
d. எண்மின் கணக்கு (Digital Account) (உதாரணம் paypal மற்றும் billpoint)



SRI LANKA

e) பேஸ்புக் ரசிகர்கள் பக்கத்தை உருவாக்கி, வியாபாரத்தைக் கொண்டு நடத்தல். பேஸ்புக் குழுக்களை உருவாக்கி, அதில் நன்பர்கள் இணைவதற்கு அழைப்பு விடுத்தல் பேஸ்புக் விளம்பரங்களைப் (Advert) பயன்படுத்தி, விற்பனையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இயக்குதல்.

## வினா 05 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

a) Menu எனும் தெரிவைச் சொடுக்குக. > செருகு (insert) > எழுத்தோவியம் **(WortArt)** > சரியான வடிவமைப்பை தெரிவுசெய்க.
எழுத்தோவியத்தை தெரிவு செய்க > வடிவமைப்பு தத்தல் சாவியை (format tab) சொடுக்குக > சரியானது உரை வடிவத்தைத் தெரிவு செய்க.

b) செருகு (insert) இனைச் சொடுக்குக > படம் (Picture) > வன்தட்டில் (Hard Disk) உள்ள படிமத்தைச் (image) சொடுக்குக.
படிமத்தை (image) தெரிவு செய்க > வடிவமைப்பு தத்தல் சாவியை (format tab) சொடுக்குக > கத்தரி (crop) யை தெரிவு செய்து சரியான படிமத்தை கத்தரிக்க.

c) உரைப்பெட்டியை (textbox) உருவாக்கி, சரியான உரையை (text) அதில் தட்டச்சு செய்யவும். உரைப்பெட்டியைத் தெரிவுசெய்க. > Format ஐச் சொடுக்குக > உரைத் தோற்றத்தைச் (Text Effect) சொடுக்குக. > 3D rotation > தேவையான திரும்பலைத் (rotation) தெரிவு செய்க.

d) செருகு (insert) இனைச் சொடுக்குக. > வடிவங்கள் (Shapes) > அதில் Callout பிரிவில் நீளவட்டத்தை தெரிக. > உரையைத் தட்டச்சு செய்க. > தேவையான இடத்தில் callout ஐ அமைக்க.

e) உரைப்பெட்டியை உருவாக்கி, சரியான உரையை அதில் தட்டச்சு செய்யவும். உரைப்பெட்டியைத் தெரிவுசெய்க. > Format ஐச் சொடுக்குக > Fill color இனை மாற்றுக.

f) **50% off** உரை முடிவிற்கு சுட்டி முனையை அசைக்க, Refference இனைத் தெரிவு செய்க > Insert footnote இனைத் தெரிந்து பின்வருவனவற்றைத் தட்டச்சு செய்க **"if you pay by creadit card maximum discount world be 30%".**

g) கம்பனியின் பெயர் மற்றும் முகவரி உள்ள வரிகளைத் தெரிவு செய்து, Align Text Right எனும் தெரிவைத் தெரிக. அல்லது CTRL+ R எனும் சுருக்கக்குறியினை அழுத்துக.

## வினா 06 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

a)

| பகுதிகள் (Section) | மதிப்புகள் (values) |
|---|---|
| 1 | nsilva@liontea.lk |
| 2 | rmuralitharan@liontea.lk, ohussain@liontea.lk |
| 3 | |
| 4 | லயன் டீ இற்கு வரவேற்கின்றோம் அல்லது கம்பனி மின்னஞ்சல் விதிகளை அறிமுகப்படுத்தல் |
| 5 | செல்வி. நளினி சில்வா / செல்வி. சில்வா / செல்வி. நளினி |
| 6 | செபலா பெரேரா |
| 7 | செபலா பெரேரா,<br>முறைமை நிர்வாகி,<br>லயன் டீ (தனி) கம்பனி, இல 540, திம்ரிகசியாய வீதி,<br>நாரஹேன்பிட்டி, கொழும்பு 05, இலங்கை.<br>தொடர்பிலக்கம் : +94-11-2559900 நீட்சி 1234<br>செல்லிடப்பேசி இலக்கம்: +94-77-1001000 |
| 8 | மின்னஞ்சல்விதிகள்.DOC<br>எவ்வாறுகடவுச்சொல்லைமாற்றுவது.DOC அல்லது DOCX |

b) இணைய அடிப்படையிலான மின்னஞ்சல் பாவனையாளருக்கும், தனித்துவமான மின்னஞ்சல் பாவனையாளருக்கும் இடையிலான வேறுபாடுகள்.

| இணைய அடிப்படையிலான மின்னஞ்சல் பாவனையாளர் (Web based email) | தனித்துவமான மின்னஞ்சல் பாவனையாளர் (Standalone email client) |
|---|---|
| இணைய உலாவி மூலம் அணுகப்படும் | இணைய உலாவி மூலம் அணுக முடியாது. இதற்கு இணைய பயனர் (Email Client Software) மென்பொருள் மிகவும் அவசியமானது. |
| பயன்படுத்துவதற்கு இணையத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். | இணையத்துடன் இணைக்கத் தேவையில்லை. இணைப்பு நிறுவப்பட்டதும் மின்னஞ்சல் சேவையகத்துடன் (email server) ஒத்தியக்கம் (synchronizing) செய்யும். |
| உதாரணம்: Gmail, Yahoomail, facebook mail | உதாரணம்: MS Outlook, Thunderbird, Apple Mail, Pegasus Mail |

## வினா 07 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

a) பிரதான புலத்திற்கு (key field) பொருத்தமான புலம் (field) : உலக பொது உற்பத்திக் குறியீடு (Universal Product Code)

காரணம் : இவ்விலக்கமானது இருமுறை தோன்றாது. (ஒவ்வொரு பொருளுக்கும் இவ்விலக்கம் தனித்துவமானது) இவ்விலக்கம் வெற்று (empty or null) இலக்கமாக அமையாது.

b)

| புலத்தின் பெயர் | தரவு வகை |
|---|---|
| உற்பத்தி வகை | உரை (Text) |
| உற்பத்திப் பெயர் | உரை (Text) |
| வழங்குநர் | உரை (Text) |
| எடை | எண்சார் (Numeric) |
| உலக பொது உற்பத்திக் குறியீடு | உரை (Text) அல்லது எண்சார (Numeric) |
| காலாவதியாகும் திகதி | தேதி / நேரம் (Date/Time) |
| விற்பனை விலை | செலாவணி (Currency) |
| அட்டை வைத்திருப்பவர்களுக்கு 5% கழிவு | ஆம் / இல்லை (Yes/No) |

c) உற்பத்தி வகை ஆனது நோக்கல் (lookup) புலமாக உருவாக்கப்படக்கூடியது. நான்கு பொருள் - பால், வெண்ணெய், பாலாடைக் கட்டி மற்றும் யோகட் ஆகியன தனிப்பட்ட அட்டவணையில் சேகரிக்கப்பட்டுள்ளது. தரவுப் பதிவின் போது நான்கு மதிப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்வதால் தரவுப் பதிவு இலகுவாக அமைகிறது. சாவிப்பலகையின் உதவியுடன் தட்டச்சு செய்வதால் சிலநேரங்களில் எழுத்துப் பிழைகள் ஏற்படலாம். தட்டச்சு செய்வதற்கு நேரமும் செலவாகும்.

d) தரவு ஏற்புடையதாக்கும் விதியினால் (validation Rule) புலங்களில் தரவுப்பதிவினை ஏற்படுத்தும் போது சில எல்லைகளை (limit) உருவாக்குகிறது.

“வெற்று (Null) அல்லது 100 மற்றும் 5000 இற்கு இடைப்பட்டது. பதிலாக வெற்று அல்லது >=100 மற்றும் <=5000. வெற்று (Null) மதிப்பை தவிர்ப்பது சிறந்தது ஏனெனில் வழங்கப்பட்ட தரவுகளில் வெற்று (Null) மதிப்புகள் இல்லை.

**பிரிவு *B* இன் நிறைவு**

## *Notice :*

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2014 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*